2005 மார்ச் 21]

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு உரிமை மீறல் பிரச்சினையை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்மீது கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என் ஆய்வில் இருக்கிறது.

2. கவன ஈர்ப்பு

ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலையில் பழுதடைந்த மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம், ஜவ்வாது மலையில் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டை வரையுள்ள பழுதடைந்த மண் சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வனக் கோட்டத்துக்கு உட்பட்ட ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ஜவ்வாது மலையில் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டை வரை செல்லும் வனச் சாலை 1924–25 ஆம் ஆண்டில் வனத் துறையால் அமைக்கப்பட்டது. காவலூர் மற்றும் மந்தாரக்குட்டை கிராமங்களின் நாற்புறமும், ஜவ்வாது மலையைச் சார்ந்த ஆலங்காயம், பூங்குளம் மற்றும் இன்னர் ஜவ்வாது காப்புக் காடுகளால் சூழப்பட்டுள்ளது. இச்சாலையின் மொத்த நீளம் 5.22 கி.மீ., அகலம் 4.0 மீ. ஆகும். இச்சாலை முழுவதும் தற்போது மண் சாலையாகவே உள்ளது. இச்சாலை மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தாலும், போக்குவரத்துக்கு ஏற்ற நிலையிலேயே உள்ளது.

இச்சாலையினை வனத் துறையினரும், மந்தாரக்குட்டை மற்றும் பீமன்குளத்தைச் சார்ந்த கிராம மக்களும் பயன்படுத்தி வருகின்றனர். இச்சாலை மண் சாலையாக, போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் இருந்த போதிலும், சாலை மிகவும் பழுதடைந்துள்ள நிலையில், பொது மக்கள் நலன் கருதி, இச்சாலையினைத் தார்ச் சாலையாக மாற்ற ரூ80.00 இலட்சம் தேவைப்படும். வனத் துறை வசம் போதிய நிதி இல்லாத காரணத்தால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைமூலம் நிதி பெற வனத் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிதி கிடைக்கப்பெற்ற பின்னர், இச்சாலையினைத் தார்ச் சாலையாக மாற்ற வனத் துறைமூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலேயே முதல் தரமான சந்தனம் கிடைக்கக்கூடிய மலை இந்த ஜவ்வாது மலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மண் சாலையைத் தார்ச் சாலையாக ஆக்கவேண்டும் என்பது. எங்கேயோயிருந்து ஆரம்பிக்கிறீர்களே?

திரு. சி. ஞானசேகரன்: அந்த ஜவ்வாது மலையில் பல கிராமங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. மலைவாழ் மக்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மந்தாரக்குட்டை, பீமவிளம், ஜெரபெண்டா, ரெட்டியூர் போன்ற கிராமத்து மக்கள் வரக்கூடிய பாதை இல்லாமல், பாதையே இருக்கிற இடம் தெரியாமல் மறைந்து போய் இருக்கிறது. 1924-25 ஆண்டுகளிலேயே அங்கே வனச் சாலை போடப்பட்டிருக்கிறது. புதிதாக ஒரு சாலை போடுவது என்று சொன்னால்தான், இன்று Supreme Court-க்கும், மற்றவற்றிற்கெல்லாம் நாம் அனுமதி கேட்க வேண்டும்; மத்திய அரசை அனுமதி கேட்கவேண்டும் என்ற நிலை. ஆனால் இதிலே ஏற்கெனவே சாலை போடப்பட்டு, சாலை (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன கேள்வி?

திரு. சி. ஞானசேகரன்: என்னுடைய கேள்வி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்—தொடர்ந்து 10 ஆண்டு காலமாக இதை வற்புறுத்தி வருகிறேன். அந்தப் பகுதி மக்கள்—ஏனென்று சொன்னால், பிரசவத்திற்குப் பெண்கள் வரவேண்டுமென்று சொன்னாலும்கூட, பாதை இல்லை. மண் சாலை போக்குவரத்துக்கு ஏற்புடையதாக இருக்கிறது என்று ** இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அமைச்சர் வந்தால் நானே அழைத்துக்கொண்டு போய்க் காட்டுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

2005 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று சொல்லாதீர்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. என்ன என்று கேள்வியைக் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இப்பொழுது வனத் துறை மூலமாக, வனத் துறையினுடைய— வனத் துறையிலே ஒரு Engineering Department இருக்கிறது. அந்தப் பொறியியல் துறை அதற்கான ஒரு அனுமதியைக் கொடுக்காத காரணத்தினாலேதான் பாரதப் பிரதமருடைய கிராமச் சாலைகள் திட்டத்தில்கூட அதை எடுக்க முடியாத ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. பாரதப் பிரதமர் கிராமச் சாலைத் திட்டத்திலே எடுத்துவிட்டார்கள். ஆனால் வனத் துறையினுடைய பொறியாளர்கள் அதற்கு அனுமதி கொடுக்காத காரணத்தால்தான் இன்னும் தடைப்பட்டு நிற்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, பொறியாளர்களை அழைத்துப் பேசி, அதற்கான அனுமதியை வழங்குவதற்கு ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராஜசேகரன் அவர்கள் காவலூரிலிருந்து மந்தாரக்குட்டைக்கு மட்டும்தான் கேட்டிருந்தார். ஆனால் (குறுக்கீடு) ஞானசேகரன்; ஞானசேகரன் அவர்கள், காவலூரிலிருந்து மந்தாரக்குட்டைக்கு மட்டும்தான் கேட்டிருந்தார். ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின்பேரில் ஜெரபெண்டா, பீமவிளம் மற்றும் மலைரெட்டியூர் ஆகிய குக்கிராமங்களை இணைக்கும் சாலைகளைத் தார்ச் சாலையாக மாற்ற பிரதம மந்திரியின் கிராமச் சாலை இணைப்புத் திட்டத்தின்கீழ் ரூ.1.76 கோடி மதிப்பீட்டிற்கான தொகை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்சாலையைத் தார்ச் சாலையாக மாற்ற மதிப்பீடு வனத் துறையால் தயார் செய்யப்பட்டு, வேலூர் திட்ட அலுவலருக்கு மார்ச் 2005, முதல் வாரத்தில் அனுப்பி வைக்கப்பட்டது. திட்ட அலுவலர் பார்வையிட்ட பின்னர், பிரதம மந்திரியின் கிராமச் சாலை இணைப்புத் திட்ட மதிப்பீட்டுக் குழு, பெங்களூருக்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பெங்களூரிலிருந்து ஒப்புதல் பெற்ற பின், வேலைகள் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். பொதுவாக வனத் துறைப் பகுதிகளிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது யார் என்ற ஒரு கேள்வி வந்துவிடுகிறது. இப்போதெல்லாம் கிராமச் சாலைத் திட்டத்திலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஞானசேகரன், வரும் நிதியாண்டில் வேலை தொடங்கப்படும் என்று சொல்கிறார்.

திரு. சி. ஞானசேகரன்: தொடங்கப்படும்; யார் செய்யப் போகிறார்கள்? இதிலே ஒரு சிக்கல் வந்து இன்னும் இரண்டு வருடங்கள் இழுத்து விடக்கூடாது, அதற்காகத்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்க விரும்புவது எல்லாம், ஒன்று வனத் துறையே இதை உடனடியாகச் செய்தாலும் சரி, இல்லையென்று சொன்னால், Highways Department இப்போது இந்தக் கிராமச் சாலைத் திட்டத்தை எல்லாம் எடுத்துச் செய்து கொண்டிருக்கிறார்கள், அவர்களிடம் நீங்கள் தரமான சாலை அமைப்பதற்கு ஒப்படைத்தாலும் சரி; மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த நிதியாண்டில் வனத் துறை செய்யப் போகிறதா? அல்லது Highways Department-இடம் விடப் போகிறீர்களா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: வனத் துறைக்கு உட்பட்ட சாலையை வனத் துறைதான் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

1. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. கே.சி. கருணாகரன்: கடலூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. ஏற்கெனவே சொன்னீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். கருணாகரன், எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். என் ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமோ, அப்போது எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடு)